கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு 122/2024

வாதி தரப்பு சாட்சி – 1 **காமாட்சி** என்பவரை திரு.ம.பெரியசாமி, இளநிலை உதவியாளர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 21.04.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. ரெங்ககவுண்டர் மகன் ஏழுமலை பெயரில் வழங்கப்பட்டுள்ள நத்தம் பட்டாவில் உள்ள பட்டா நிலத்தின் விஸ்தீரனம் எவ்வளவு என்றால் சுமார் 16 ¾ சென்ட் ஆகும். மேற்படி நிலத்திற்கு மேல்புறம் சுமார் 10 ¾ சென்ட் நிலத்தை 4 முதல் 7 வரையான பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி 16 ¾ சென்ட் நிலத்தில் ரெங்ககவுண்டருக்கு பாத்தியப்பட்ட ஓட்டுவில்லை வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு தெற்கே காலி இடம் உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி 10 3/4 சென்டிற்கு மேற்கே 4ம் பிரதிவாதியின் ஓட்டுவில்லை வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டில் 4ம் பிரதிவாதியும், அவரது சித்தப்பா மற்றும் அவரது குடும்பத்ினர் அங்கு குடியிருக்கிறார்களா என்றால் எனது தந்தை காலத்திலிருந்து குடியிருந்து வருகிறார்கள். மேற்படி கிரையம் பெற்ற 10 ¾ சென்ட்டில் ஆடு, மாடுகளுக்ககாக தொட்டி கட்டி, விறகு போட்டு 4ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

3. மேற்படி 16 ¾ சென்ட் நிலத்திற்கு தெற்கே தான் நான் கிரையம் பெற்ற 21 சென்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். ரெங்க கவுண்டர் நிலமான 16 ¾ சென்டில் எனக்கு எதன் அடிப்படையில் பாத்தியம் உள்ளது என்று கேட்கிறேன் என்றால் ரெங்கவுண்ட்ர் மகன் எழுமலைக்காக சேர்த்து எனது தந்தையால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடத்தப்பட்டதால் அதன் அடிப்படையில் அவரது சொத்தில் எனக்கு உரிமை உள்ளது என்று கோருகிறேன்.

4. மேற்படி வழக்கை நடத்தி எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பு வாங்கியதால் மேற்படி சொத்துக்களை உரிமை உள்ளதாக கூறி கட்சி செய்கிறேன்.

ரெங்ககவுண்டர் மகன் ஏழுமலைக்கு நான் தான் கொல்லி வைத்து இறுதி சடங்குகள் செய்தேன். நான் சொல்வது பொய் என்றும், ரெங்க கவுண்டர் பேரன்களாக 2ம் பிரதிவாதி மற்றும் பலர் சேர்ந்து ரெங்ககவுண்டருக்கு இறுதி காரியங்கள் செய்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ரெங்ககவுண்டருக்கு கொல்லி வைத்ததால் அவரது சொத்துக்களில் உரிமை கோர எனக்கு தகுதி என்றும், அவரது வாரிசுகளுக்கு மட்டுமே அவரது சொத்துக்கள் பாத்தியப்படும் என்றால் சரியல்ல.

5. மேற்படி ரெங்ககவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரையம் பெற்றுக்கொள்ள அவரது வாரிசுகள் கேட்ட போது நான் மறுத்துவிட்டதால் வேறு நபர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ரெங்ககவுண்டருக்கு நான் கொல்லி வைத்து இறுதி சடங்கு செய்ததால் மேற்படி சொத்துக்களை என்வசம் ஒப்படைத்துவிட்டு தற்போது அதற்கு மாறாக வேறு நபர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள்.

**1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**